P6 PRELIMINARY
TESTPAPER 3

Index Number : | | | | | |  | |

PRIMARY SCHOOL

PRELIMINARY EXAMINATION - 2015

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 6

Name : ______________________________ ( )

Class : Primary 6 _______________

Date : ______________________________


INSTRUCTIONS :

Do not open this booklet until you are told to do so.
Follow all instructions carefully.

கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள படங்களையும் சொற்றொடர்களையும் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக :

P6 PRELIMINARY TESTPAPER 3

<u>கட்டுரை 3</u>




| | |
|---|---|
| கேளிக்கைச் சந்தை | கண் சிமிட்டும் நேரத்தில் |
| பெரும் திரளாக | துணிவுமிக்க ஆண்கள் |
| வேடிக்கை | தலைதெறிக்க |
| பேரம் பேசி | நிலை தடுமாறி |

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள (1,2,3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

"அ" பிரிவு

A1 வேற்றுமை

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

அரசன் ஒருவன் ஒரு நாட்டை ஆண்டு வந்தான். தன் நாட்டு _____(1)_____ சோம்பேறித்தனத்தைக் கண்டு அவன் வருந்தினான். அறிவுடையவனான அவன், தன் மக்களுக்கு நல்ல பாடம் புகட்டி _____(2)_____ திருத்த நினைத்தான். மக்கள் நடமாடும் கடை வீதியின் நடுவே பாறாங்கல் ஒன்றை வைத்தான். அவ்வழியாக வந்த பலரும் _____(3)_____ கிடந்த கல்லைத் தாண்டிச் சென்றனர். யாரும் அதை அகற்ற முன் வரவில்லை.

அப்போது அங்கு வந்த வீரன் ஒருவன் அக்கல்லைத் தூக்கி அகற்றினான். _____(4)_____ அடியில் ஒரு பெட்டி இருந்தது. பெட்டியைத் திறந்து பார்த்தபோது அதனுள் பொற்காசுகளும் நகைகளும் இருந்தன. வீரனைச் சுற்றி ஒரு கூட்டம் கூடியது. _____(5)_____ வெளிவந்த அரசன் பெட்டியிலிருந்தவை எல்லாம் வீரனுக்கே சொந்தம் என்று கூறினான். அதைக் கேட்ட மக்கள் ஆச்சரியமடைந்தனர். தங்களது _____(6)_____ ஒரு நல்ல வாய்ப்பு நழுவிவிட்டதே என்று எண்ணி அவர்கள் பெருமூச்சு விட்டனர். பொறுப்புடன் நடந்துகொண்டதால் அந்த வீரன் பலனடைந்தான்.

Q1.
1. மக்களை
2. மக்களால்
3. மக்களுக்கு
4. மக்களுடைய

Q2.
1. அவர்களது
2. அவர்களை
3. அவர்களுக்கு
4. அவர்களுடன்

Q3.
1. நடுவீதிக்கு
2. நடுவீதியில்
3. நடுவீதியோடு
4. நடுவீதியிலிருந்து

Q4.
1. கல்லில்
2. கல்லுக்கு
3. கல்லுடைய
4. கல்லிலிருந்து

Q5.
1. கூட்டத்தை
2. கூட்டத்திற்கு
3. கூட்டத்தோடு
4. கூட்டத்திலிருந்து

Q6.
1. சோம்பேறித்தனத்தை
2. சோம்பேறித்தனத்தால்
3. சோம்பேறித்தனத்திடம்
4. சோம்பேறித்தனத்திலிருந்து

A2 செய்யுள்\ பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7. ______________ கேடு நினைப்பான் .

1) கெடுவான் 3) புத்திமான்
2) படுவான் 4) பலவான்

Q8. சிறு துளி பெரு ________________ .

1) துணிவு 3) வெள்ளம்
2) கரையும் 4) செல்வம்

Q9. __________________ காரியம் சிதறாது .

1) அமைதியான 3) பதறிய
2) அவசர 4) பதறாத

Q10. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் ________________ அரிது .

1) தலைகாண்பு 3) பகுத்துண்டு
2) மிகைநாடி 4) மெய்ப்பொருள்

Q11. எண்ணித் துணிக __________________ துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு .

1) சிறிதெனினும் 3) மாறாது
2) கருமம் 4) தன்னொளி

Q12. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் __________________
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை .

1) ஆவான் 3) காத்தலும்
2) குற்றமும் 4) நூலோர்

தெரிவுவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

அறியாமல் குற்றம் புரிதல் மனித இயல்பு. ஆனால் குற்றம் புரிந்தவர்கள் ஆண்டவரிடத்திலும் பெரியவர்களிடத்திலும் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒப்புக்கொண்டால் அக்குற்றங்களை இறைவனும் மன்னிப்பார், பெரியவரும் அத்தகைய பிழைகளைப் பொருத்தருள்வர். இக்கருத்தையே இக்கதை விளக்குகிறது.

ஒரு சிறைச்சாலையில் குற்றவாளிகள் பலர் இருந்தார்கள். அந்நாட்டை ஆண்ட அரசர் ஒரு நாள் மாறுவேடம் பூண்டு அந்தச் சிறைச்சாலையைப் பார்வையிட வந்தார். சிறை அதிகாரிக்கு மட்டும் அவர் மன்னர் என்று தெரியும். சிறை அதிகாரியுடன் சென்ற மன்னர் கைதிகளைப் பார்வையிட்டார். அவர் அவர்களிடம் சென்று அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அதன் காரணத்தை விசாரித்து அறிய விரும்பினார்.

அங்கிருந்த கைதிகள் அனைவரும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்றும் தாங்கள் எந்தத் தவறும் செய்யதில்லை என்று, இப்படிச் சிறையில் அடைக்கப்பட்டது அநீதியென்றும் அபாண்டமாக பொய் கூறினர். மன்னரும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டு வந்தார். கடைசியாக அவர் ஒரு கைதியைக் கண்டார். அவனிடமும் பிற கைதிகளிடம் விசாரித்தது போலவே விசாரித்தார்.

அவன், "ஐயா! என் பெயர் சுப்பன். நான் பரம ஏழை. என் மனைவி சிக்கனம் இல்லாதவள். எங்களுக்குக் குழந்தைகளும் அதிகம். வறுமைத் துன்பத்தைத் தாங்க முடியாத நான் பக்கத்துத் தெருவில் திருடிவிட்டேன். அரண்மனைக் காவலர் என்னைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டதால் நான் சிறையில் அடைக்கப்பட்டேன். நான் செய்த குற்றத்திற்கு இப்போது தண்டனை அனுபவிக்கிறேன்," என்று கண்ணீர் மல்க கூறினான்.

மன்னரின் மனம் நெகிழ்ந்துவிட்டது. இருப்பினும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாது அவர் சிறை அதிகாரியைப் பார்த்து, உரத்தக் குரலில், "சிறை அதிகாரியே! இச்சிறையில் உள்ள அத்தனைப்பேரும் உத்தமர்கள். சுப்பன் ஒருவன் மட்டுமே குற்றவாளி. இவன் ஒருவன் இங்கிருந்தால் மற்றவர்கள் அத்தனைப்பேரும் கெட்டுப்போய்விடுவார்கள். எனவே, இவனைச் சிறையிலிருந்து விரட்டிவிடுங்கள்!" என்று கூறினார். உண்மை பேசிய சுப்பன் விடுதலை பெற்றான்.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் பின்னர், OAS விடைத்தாளில் அதன் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. இக்கதை விளக்க வரும் கருத்து யாது?

1. எல்லா குற்றவாளிகளுக்கும் மன்னிப்பு உண்டு
2. அறியாமல் குற்றம் புரிவது மனிதர்களின் இயல்பு
3. பெரியவர்கள் குற்றத்தைப் பொருத்தருள வேண்டும்
4. குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்

Q14. அரசர் ஏன் மாறுவேடம் அணிந்திருந்தார்?

1. சிறையில் இருந்த குற்றவாளிகளைப் பார்வையிட
2. குற்றவாளிகள் சிறையிலிடப்பட்ட காரணத்தை அறிய
3. உண்மை குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்க
4. தான் அரசன் என்பதைக் குற்றவாளிகள் அறியாதிருக்க

Q15. சிறையிலிருந்த கைதிகள் கூறிய பொய் என்ன?

1. அவர்கள் நிரபராதிகள் என்பதாகும்
2. அவர்கள் அநீதியற்றவர்கள் என்பதாகும்
3. அவர்கள் குற்றம் புரிந்தவர்கள் என்பதாகும்
4. அவர்களை விடுவிக்க வேண்டும் என்பதாகும்

Q16. சுப்பன் பிடிப்படக் காரணம் என்ன?

1. அவன் பக்கத்துத் தெருவில் களவாடியது
2. அவன் மனைவி சிக்கனமற்றவள் என்பது
3. அவன் ஏழ்மையில் துன்பப்பட்டு வாடியது
4. அவன் காவலர்களிடம் கையும் களவுமாக சிக்கியது

Q17. அரசர் சுப்பனை ஏன் விடுவித்தார்?

1. சுப்பன் உண்மையாகவே திருடியதால்
2. சுப்பன் மட்டுமே குற்றவாளி என்பதால்
3. சுப்பன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டதால்
4. சுப்பன் பிறரைக் கெடுத்துவிடுவான் என்பதால்

## B4சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை OAS விடைத்தாளில் நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18. பார்வையிட

1. ஆராய
2. விசாரிக்க
3. எதிர்நோக்க
4. கண்காணிக்க

Q19. அபாண்டமாக

1. அபாரமாக
2. ஆவேசமாக
3. அநியாயமாக
4. ஆணித்தரமாக

Q20. நெகிழ்ந்துவிட்டது

1. இருகிவிட்டது
2. இளகிவிட்டது
3. இலேசாகிவிட்டது
4. இறுக்கமாகிவிட்டது

BLANK PAGE

B5 *கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்*

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி

# மாயாவின் கனவு


நவம்பர் மாதம் முழுதும்

40% - 80% தள்ளுபடி விற்பனை

*உறுப்பினர்களுக்கு மேலும் 10% தள்ளுபடி வழங்கப்படும்*

விளையாட்டுப் பொருள்கள்


- மஞ்சள் நிற விலைப்பட்டை உள்ளவை
  - 40% - 60% தள்ளுபடி
- சிவப்பு நிற விலைப்பட்டை உள்ளவை
  - 70% - 80% தள்ளுபடி



பற்பல புத்தகங்கள்
உங்களுக்காகவே!!

40% -50% தள்ளுபடி

*(நீங்கள் வாங்க விரும்பும் புத்தகங்களுக்கு அக்டோபர் மாதத்திலேயே பணம் கட்டலாம்!)*



மாறுவேட ஆடைகள்

*எந்த விழாவிற்கும் ஏற்புடையவை!*

*வெவ்வேறு அளவில் கிடைக்கும்!*

*சிறுவர் முதல் முதியவர் வரை அணிந்து மகிழ வாருங்கள்!!*

*40% - 50% தள்ளுபடி*

- 21 ஆர்ச்சர்ட் சாலை சிங்கப்பூர் 307654
- தொலைபேசி : (65) 6234 7668
- இணையமுகவரி: www.maya.com

வாரநாட்கள் :

காலை 11 மணி முதல் இரவு 8 மணி வரை

வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறைகள்:

காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை

**Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்) )**

Q21. இவ்விற்பனை எப்போது நடைபெறும்? ......

1. வாரநாட்களில்
2. நவம்பர் மாதத்தில்
3. அக்டோபர் மாதத்தில்
4. வார இறுதி நாட்களில்

Q22. சிவப்பு நிற விலைப்பட்டை எதைக் குறிக்கும்?

1. உறுப்பினர்களுக்கான சலுகையை
2. மாறுவேட ஆடைகளின் விலையை
3. விளையாட்டுப்பொருள்களின் விலையை
4. 70% - 80% தள்ளுபடி வழங்கப்படுவதை

Q23. புதன்கிழமை அன்று புத்தகம் வாங்க ஏற்ற நேரம் எது?

1. இரவு 8 மணிக்குப் பின்
2. இரவு 9 மணிக்கு ீபின்
3. காலை 10 மணிக்கு முன்
4. காலை 11 மணிக்குப் பின்

'ஆ' பிரிவு

## C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 10 மதிப்பெண்கள்) )

| | |
|---|---|
| Q24 ஆடு மாடுகள் போன்ற சில மிருகங்கள் மாமிசம் உண்பதில்லை. அவை இலை ________ உண்டு உயிர் வாழ்கின்றன. | Q24 ( ) |
| Q25 பாரம்பரியம், பண்பாடு, ________ இவை அனைத்தும் நம் சமயத்திற்கு இன்றியமையாதவையாகும். அவற்றை நாம் கட்டிக்காக்க வேண்டும். | Q25 ( ) |
| Q26 கோயில் நகைகளைத் திருடர்கள் ________ அடித்துவிட்டு தலைமறைவாகிவிட்டனர். ஆனால் நம் காவற்துறையினர், அவர்களை வலை வீசிப் பிடித்துவிட்டனர். | Q26 ( ) |
| Q27 காய்ச்சலில் பாதிக்கப்பட்ட ரவியின் உடல் ________ இன்றி காணப்பட்டது. எனவே, அவனது தாயார் அவனுக்குச் சத்துள்ள உணவு கொடுத்தார். | Q27 ( ) |
| Q28 ஆசிரியர் தொழிலைப் போல, தாதியர் ________ புனிதமானதாகும். எல்லாராலும் இந்த வேலையைச் சுலபமாக செய்ய முடியாது. | Q28 ( ) |

| | |
|---|---|
| (1) கலை | (2) களை |
| (3) பழம் | (4) பலம் |
| (5) பனியும் | (6) பணியும் |
| (7) கொல்லை | (8) கொள்ளை |
| (9) தலைகளை | (10) தழைகளை |

## D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஒரு பெரிய அரச மரத்தில் தூக்கணாங்குருவிகள் கூடு கட்டி வாழ்ந்தன. ஒருநாள் இடி மின்னலுடன் கனத்த மழை பெய்தது. காட்டிலுள்ள பெரிய மரங்களெல்லாம் (Q29) __________ சாய்ந்து விழுந்தன. தூக்கணாங்குருவிகள் கூட்டுக்குள் நடுங்கி கொண்டு இருந்தன. | Q29 ( ) |
| அப்போது அரச மரத்தின் கீழ் ஒரு குரங்கு ஓடி வந்து ஒதுங்கியது. அது (Q30) __________ வெடவெடத்து நடுங்கிக் கொண்டிருந்தது. அதைத் தூக்கணாங்குருவிகள் பார்த்தன. அவை குரங்கு (Q31) __________ கண்டு அதன் மீது இரக்கம் கொண்டன. | Q30 ( )<br>Q31 ( ) |
| "குரங்கண்ணா! நீ ஏன் குளிரினால் அவதிப் படுகிறாய்? உனக்குக் கைகளும் கால்களும் இருக்கின்றன அல்லவா? உனக்கு ஒரு வீடு (Q32)__________ கொள்ளக் கூடாதா?" என்று தூக்கணாங்குருவிகள் கேட்டன. "எனக்கு வீடு கட்டத் தெரியும். ஆனால் அதற்குத் தகுந்த புல்லுக்குச்சி கிடைக்கவில்லை. அதைத் தான் தேடிக்கொண்டிருக்கிறேன். இதோ இருக்கிறது. இது கிடைத்தால் போதும் என்று (Q33) __________ கூறிக்கொண்டே தூக்கணாங்குருவிகளின் கூட்டின் மேல் பாய்ந்தது குரங்கு. | Q32 ( )<br>Q33 ( ) |
| தூக்கணாங்குருவிகள் கெஞ்சக் கெஞ்சக் கேளாது, அவற்றின் கூட்டைப் பிய்த்துப் போட்டு (Q34) __________ செய்தது. அதிர்ச்சியடைந்த தூக்கணாங்குருவிகள், "நாம் இக்குரங்கிற்கு நல்லதைத் தானே சொன்னோம். இது நம் வீட்டை இப்படிச் செய்துவிட்டதே," என்று கூறி (Q35) __________ . திமிர் பிடித்தக் குரங்கு மழை நின்றதும் அவ்விடத்தை விட்டு அகன்றது. பாவம் தூக்கணாங்குருவிகள். மீண்டும் கூடு கட்டத் தொடங்கின. | Q34 ( )<br>Q35 ( ) |

| | | |
|---|---|---|
| 1) குளிரில் | 5) கஷ்டப்படுவதை | 9) உடைத்து |
| 2) தயக்கத்துடன் | 6) வேரோடு | 10) கோபத்துடன் |
| 3) [illegible] | 7) மழையால் | 11) அசைந்து |

BLANK PAGE

## D8. சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

விமலன் என்ற இளைஞனிடம் பல கழுதைகள் இருந்தன. அவன் அவற்றில் சரக்கு ஏற்றிச் சென்று அதன் மூலம் கிடைக்கும் கூலிப்பணத்தை வைத்துச் சுகமாக வாழ்க்கை நடத்தினான். ஒருநாள் ஒரு வயதான துறவியைச் சந்தித்தான் விமலன்.

துறவி விமலனிடம், "தம்பி, நீ என்னுடன் வந்தால் புதையல் இருக்கும் ஓர் இடத்தைக் காட்டுகிறேன். புதையலை உன் இருபது கழுதைகள் மீது ஏற்றிக் கொள்ளலாம். ஆனால், பத்து கழுதைகளையும் அவைச் சுமக்கும் பொருள்களையும் நீ எனக்குக் கொடுத்துவிட வேண்டும். இந்த ஒப்பந்தத்திற்கு உனக்குச் சம்மதமா?" என்று கேட்டார். விமலன் உடனே சம்மதித்தான். அவர்கள் காடு மேடெல்லாம் கடந்து ஒரு மலைச்சரிவை அடைந்ததும் அங்கு துறவி ஒரு பெரிய பாறையின் முன் நெருப்பு மூட்டி சில மந்திரங்கள் ஓதினார். பேரொலியுடன் பாறை விலகியது. அதன் பின்னால் ஒரு குகையின் வாயில் தென்பட்டது. விமலன் துறவியைப் பின்தொடர்ந்து குகைக்குள் சென்றான். அக்குகையில் பொன்னும் நவரத்தினங்களும் குவிந்து கிடந்தன. அவற்றை இருவரும் அள்ளி இருபது மூட்டைகளில் கட்டினர். துறவி ஓர் ஓரத்தில் இருந்த ஒரு சிறு மரப்பெட்டியை எடுத்துத் தன் பைக்குள் போட்டுக்கொண்டார்.

பின்னர், இருவரும் ஆளுக்குப் பத்து கழுதைகளில் மூட்டைகளைச் சமமாகப் பங்கிட்டு ஏற்றிக்கொண்டு புறப்பட்டனர். பேராசை பிடித்த விமலனுக்கு மனநிறைவு ஏற்படவில்லை. வழியில் அவன் முதியவரிடம், "ஐயா, நீங்களோ ஒரு துறவி. இவ்வளவு பொன்னும் பொருளும் உங்களுக்கு எதற்கு? அதோடு நீங்கள் வயதானவர். இந்தத் தள்ளாத வயதில் இவ்வளவு செல்வத்தை உங்களால் எப்படி அனுபவிக்க முடியும். தயவு செய்து உங்களிடம் உள்ள கழுதைகளையும் அவற்றின் மேல் ஏற்றப்பட்டுள்ள மூட்டைகளையும் என்னிடமே கொடுத்துவிடுங்கள்," என்று மன்றாடினான். முதியவர் புன்சிரிப்புடன் அவன் கேட்டதைத் தட்டாமல் தந்துவிட்டார். அவரிடம் எஞ்சியிருந்தது அந்தச் சிறிய மரப்பெட்டியே.

அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது என்பதை அறிய விமலன் விரும்பினான். அதுபற்றி துறவியிடம் விசாரித்தான். "இதனுள் மந்திர மை இருக்கிறது. அதை வலது கண்ணில் பூசிக்கொண்டு பார்த்தால் பூமியில் புதைந்து கிடக்கும் புதையல் எல்லாவற்றையும் பார்க்கலாம்," என்று கூறினார். அதைக் கேட்டதும் விமலன் அப்பெட்டியைத் துறவியிடமிருந்து பிடுங்கினான். பெட்டியைத் திறந்த விமலன் தவறுதலாக மையைத் தன் இடது கண்ணில் பூசினான். உடனே கண்பார்வை மங்கி அவன் குருடன் ஆனான்.

Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)

Q36. விமலன் எப்படி பணம் சம்பாதித்தான்? (3)

Q37. விமலனும் துறவியும் செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன? (4)

Q38. புதையலைக் கொண்ட குகை எங்கே இருந்தது? (3)

Q39. விமலன் என்ன சொல்லி துறவியிடமிருந்த கழுதைகளையும் புதையலையும் பெற்றான்? (4)

Q40. விமலன் தன் கண்பார்வையை இழக்கக் காரணம் என்ன? (3)

Q41. இறுதியில் துறவி என்ன செய்தார்? (3)

*** முற்றும் ***

# P6 PRELIMINARY TESTPAPER 3

விடைகள் - தாள் 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Q1. 4 | Q2. 2 | Q3. 2 | Q4. 2 | Q5. 4 | Q6. 2 |
| Q7. 1 | Q8. 3 | Q9. 4 | Q10. 1 | Q11. 2 | Q12. 4 |
| Q13. 4 | Q14. 4 | Q15. 1 | Q16. 4 | Q17. 3 | |
| Q18. 4 | Q19. 3 | Q20. 2 | Q21. 2 | Q22. 4 | Q23. 4 |
| Q24. 10 | Q25. 1 | Q26. 8 | Q27. 2 | Q28. 6 | |

Q29. 6 Q30. 1 Q31. 5 Q32. 3 Q33. 10 Q34. 8 Q35. 4

Q36. விமலன் தன்னிடம் இருந்த கழுதைகளின் மீது சரக்கு ஏற்றிச் செல்வதன் வழி பணம் சம்பாதித்தான் .

Q37. விமலன் துறவியுடன் வந்து அவர் காட்டும் இடத்திலிருக்கும் புதையலை அவனுடைய இருபது கழுதைகள் மீது ஏற்றிக் கொள்ள உதவி செய்தால் , அவன் அவரிடம் பத்து கழுதைகளையும் அவை சுமக்கும் பொருள்களையும் கொடுத்துவிட வேண்டும் . இதுவே விமலனும் துறவியும் செய்து கொண்ட ஒப்பந்தம் ஆகும்.

Q38. புதையலைக் கொண்ட குகை ஒரு மலைச்சரிவில் இருந்த பெரிய பாறைக்குப் பின் இருந்தது .

Q39. அவ்வளவு பொன்னும் பொருளும் துறவியான அவருக்கு எதற்கு என்றும் , வயதான அவரால் அந்தச் செல்வத்தை அனுபவிக்க முடியாது என்றும் அவற்றை அவனிடமே கொடுத்துவிடும்படியும் சொல்லி துறவியிடமிருந்த கழுதைகளையும் புதையலையும் பெற்றான்

Q40. விமலன் தன் கண்பார்வையை இழக்கக் காரணம் வலது கண்ணில் பூச வேண்டிய மையை இடது கண்ணில் பூசியதே ஆகும் .

அல்லது — விமலன் தன் கண்பார்வையை இழக்கக் காரணம் அவனிடமிருந்த பேராசையும் அவசரமும் ஆகும் .

Q41. இறுதியில் துறவி விமலனை அவன் ஊரில் விட்டுவிட்டு பத்து மூட்டைகளை ஏற்றிய கழுதைகளைத் தாம் நடத்தி வந்த ஆதரவற்றோர் இல்லத்திற்கு ஓட்டிச் சென்றார் .